www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் திருப்புத் தேர்வு - 2025

வகுப்பு : 12

காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் :

மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்தநடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. **கருத்து 1:** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.

   **கருத்து 2:** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

   (அ) இரண்டு கருத்தும் சரி (ஆ) கருத்து 2 சரி

   (இ) கருத்து 1 சரி (ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

2. தமிழில் திணைப்பாகுபாடு __________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

   (அ) எழுத்துக்குறிப்பு (ஆ) தொடர்க்குறிப்பு

   (இ) சொற்குறிப்பு (ஈ) பொருட்குறிப்பு

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   (அ) உரிமைத்தாகம் – (1) பாரசீகக் கவிஞர்

   (ஆ) அஞ்ஞாடி – (2) பூமணி

   (இ) ஜலாலுத்தீன் ரூமி – (3) பக்தவத்சல பாரதி

   (ஈ) தமிழர் குடும்ப முறை – (4) சாகித்திய அகாதெமி

   (அ) 2, 3, 4, 1 (ஆ) 2, 4, 1, 3 (இ) 3, 4, 1, 2 (ஈ) 2, 4, 3, 1

4. 'குடிமக்கள் காப்பியம்' என்று அழைக்கப்படும் நூல் __________.

   (அ) கம்பராமாயணம் (ஆ) வளையாபதி

   (இ) சிலப்பதிகாரம் (ஈ) இரட்சணிய யாத்திரிகம்

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

   (அ) கடுக்காய் (ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

   (இ) மாவிலைக்கரி (ஈ) வசம்பு

6. தவறான இணையைத் தேர்வு செய்க.

   (அ) ஆசிரியப்பா – அகநானூறு (ஆ) கலிவெண்பா – தூது

   (இ) விருத்தப்பா – நாலடியார் (ஈ) குறள் வெண்பா – திருக்குறள்

7. 'மாதவம்' என்பதன் இலக்கணக் குறிப்பு __________.

   (அ) வினைத்தொகை (ஆ) பெயரெச்சம்

   (இ) உவமைத்தொகை (ஈ) உரிச்சொற்றொடர்

M POOVARASAN M.SC B,Ed
PG Asst In Chemistry
Dharmapuri District

8. "விளியறி ஞமலி" – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

   (அ) எருது (ஆ) நாய் (இ) குதிரை (ஈ) யாழி

9. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது

   (அ) புகழ் (ஆ) அச்சம் (இ) நம்பிக்கை (ஈ) பெருமிதம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. எளியது, அரியது என்பன
(அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை
(ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது
(இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு
(ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

11. "என்னைப் போல் சிவாஜி நடிப்பார். ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது" என்றவர் __________.
(அ) ஓமர்ஷெரீப் (ஆ) ரிச்சர்ட் பர்ட்டன்
(இ) ராஜ்கபூர் (ஈ) மார்லன் பிராண்டோ

12. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
(அ) புதுமைப்பித்தன் (ஆ) கு. அழகிரிசாமி
(இ) எஸ். இராமகிருஷ்ணன் (ஈ) ஜெயமோகன்

13. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
(அ) ஆய் அண்டிரனும் அதிகனும் (ஆ) பாரியும் காரியும்
(இ) நள்ளியும் ஓரியும் (ஈ) நல்லியக்கோடனும் குமணனும்

14. 'மா முன் நிரை; விளம் முன் நேர்' என்பது __________
(அ) இயற்சீர் வெண்டளை (ஆ) வஞ்சித்தளை
(இ) வெண்சீர் வெண்டளை (ஈ) ஆசிரியத்தளை

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – யார்க்கு?
18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மற்றுபவை எவை?
20. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க.
(தமிழ் ஒளி, அம்பை, கோதை, அசோகமித்தரன், புதுமைப்பித்தன்)
(அ) தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் __________
(ஆ) சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம் __________

23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) வியந்து (ஆ) அறுத்து

25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) உரனுடை (ஆ) தனியாழி

26. 'பாவிகம்' – விளக்கம் தருக.

M POOVARASAN M.SC B,Ed
PG Asst In Chemistry
Dharmapuri District



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

27. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

28. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
ஊண், ஊன்

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
புள்ளைக்கு உடம்பு சரியில்லை, மூணு நாளா சிரமப்படுது.

30. கலைச்சொல்லாக்கம் தருக. (அ) Passport (ஆ) Debit Card

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.
விடைக்கேற்ற வினா அமைக்க.
குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

## பகுதி – III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34. 'சூதும் கள்ளும் கேடு தரும்' – திருக்குறள் வழி விவரிக்க.

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. 'சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்' –விளக்குக.

36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

37. 'மையாடல் விழா' – விளக்குக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)**

(ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. (அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

(ஆ) அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்தாகக் கூறுவன யாவை?

41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

– **நாமக்கல் கவிஞர்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

(அ) யானைக்கும் அடி சறுக்கும்

**(அல்லது)**

(ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

43. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. (அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

(ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. (அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க. **(அல்லது)**

(ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) 'விண்வேறு........' எனத் தொடங்கும் 'இதில் வெற்றிபெற' பாடலை எழுதுக.

(ஆ) 'நோய்' எனத் முடியும் குறளை எழுதுக.

************



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com